**அன்னை கல்லூரியில் நாட்டு நலப்பணித்திட்டம் சார்பில் கோயில் வளாகத் தூய்மைப்பணி முகாம்.**

கும்பகோணத்தை அடுத்து கோவிலாச்சேரியில் அமைந்துள்ள அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி நாட்டுநலப்பணித் திட்டத்தின் சார்பில் வேப்பத்தூர் ஊராட்சியில் இடங்கொண்டேஸ்வரர் கோயில் ஒரு நாள் தூய்மைப்பணி முகாம் நடைபெற்றது.இம் முகாமிற்கு அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி **முதல்வர் முனைவர் சி.பொ.மாணிக்கவாசுகி** அவர்கள் தலைமையேற்றார்.சிறப்பு விருந்தினராக கோயில் நிர்வாகி **வழக்கறிஞர் ராஜ்மோகன்** அவர்கள் கலந்துகொண்டு சீறப்புரை வழங்கி முகாமைத் தொடங்கி வைத்தார். நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் கோயிலை தூய்மை செய்ததோடு மரக்கன்றுகள் வைத்து தூய்மைப்பணி மேற்கொண்டனர்.முதலாவதாக நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் **பேரா.சு.சோமசுந்தரம்** வரவேற்றார். இறுதியாக நாட்டு நலப்பணித்திட்ட மாணவன் **முருகன்** நன்றி கூறினார்.





